


PORIYIYAL KADHIR

தனி பிரதி
ரூ.10/-



# பொறியியல் கதிர்

கதிர் 48 | பாரிப்பு 10 | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜுன் 2016

## நெஞ்சம் நிறைந்து வாழ்த்தி வரவேற்கிறோம்







ஆறாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்று, நல்லாட்சிதரவிருக்கும் தங்கத்தாரகை, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்வோடு வரவேற்கிறோம்.

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org | email id : tneapwd@yahoo.co.in

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளை தலைவர் பொறியாளர் எஸ்.பிரபாகரன் உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு மதுரையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் சால்வை அணிவித்தல்



தமிழ்நாடு பொறியியல் சங்கம் சிவகங்கை கிளை உறுப்பினர் பொறியாளர் ஆர்.எம்.ஏ.பொன்னன் உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு மதுரையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் சால்வை அணிவித்தல்



## பொதுச் செயலாளர் மடல்

மடல் - 10 (2015 - 2016)

# தொடரும் நம் பயணம் .......



**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

ஆறாவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்து வாழ்த்தி வரவேற்கிறது.

கடந்த 25.05.2016 அன்று மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்தில் சங்கப் பொறுப்பாளர்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

பகுதி நேர பட்டப் படிப்பு படித்த இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக பதவிப் பெயர் மாற்றம் வழங்கும் கோப்பு தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. தாமதத்திற்கு தலைமைப் பொறியாளர் (பொது) தரப்பில் சொல்லப்பட்ட அனைத்து காரணங்களும் முடிவுக்கு வந்த பிறகு கடந்த 05.05.2016 அன்று தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் தேர்தல் விதிகள் அமுலில் இருப்பதால் தேர்தல் முடிந்த பிறகு பதவி பெயர் மாற்றம் வழங்கப்படும் என்று தெரிவித்தார். அதற்கு பிறகு 02.06.2016 அன்று தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை சந்தித்து கேட்ட பொழுது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக பதவி பெயர் மாற்ற ஆணை வழங்க ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தினார். முடிந்து விடும் என்று நம்புகிறோம்.

கடந்த 21.12.2015 அன்று பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர்களாக பதவி உயர்வு ஆணை தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களால் வழங்கப்பட்டது. 31.12.2015 அன்று மேற்கண்ட ஆணையை தற்காலிகமாக நிறுத்தி வைக்க சொல்லி தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது. தற்போது 19.05.2016 அன்று மேற்கண்ட ஆணையை ரத்து செய்து தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் ஆணை வழங்கியுள்ளார். இது மிகவும் வன்மையான கண்டனத்துக்கு உரிய செயலாகும்.

விதிகள் தெளிவாக இருந்தும் இந்த ஆணையை ரத்து செய்தது உள்நோக்கமுள்ள செயலாகும். இந்த நியாயமற்ற செயலை பற்றி தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடம் 02.06.2016 அன்று கேட்ட பொழுது மேற்கண்ட பொருள் குறித்து அரசுக்கு தெளிவுரை கோரப்பட்டுள்ளது எனவும், அரசிடமிருந்து தெளிவுரை வந்ததும் மீண்டும் மேற்கண்ட நபர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். அரசிடமிருந்து தெளிவுரை விரைந்து பெற முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er.D. MURUGESAN, General Secretary
Cell Nos. 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

தமிழ்நாடு அரசு

பொதுப்பணித் துறை

அனுப்புநர்
பொறி. சு. திருமாறன், எம்.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர்,
நீ.ஆ.து. (ம)தலைமைப் பொறியாளர், (பொது)
பொதுப்பணித் துறை,
சேப்பாக்கம், சென்னை -5 .

பெறுநர்
1.முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்)
தலைமைப் பொறியாளர் (கட்டடம்)
சென்னை மண்டலம், பொதுப் பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை-5.
2.தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,
சென்னை மண்டலம்,
சேப்பாக்கம், சென்னை-5.
3.தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,
திருச்சி மண்டலம்,திருச்சி
4.தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,
மதுரை மண்டலம், மதுரை
5.தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,
திட்ட உருவாக்கம்,
சேப்பாக்கம், சென்னை-5.
6.தலைமைப் பொறியாளர்
வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும்
கட்டுமான ஆதாரம்,சேப்பாக்கம்,
சென்னை-5.
7.தலைமைப் பொறியாளர் (கட்டடம்)மதுரை.
8.தலைமைப் பொறியாளர் (கட்டடம்)திருச்சி.

கடித எண்: எஸ்2(4) /65508/2001/ நாள் 17.03.2016

அய்யா,

பொருள்: பணியமைப்பு – பொபது - த.நா. பொ. சா.ப. தொகுதி – ஆட்குறைப்பு காரணமாக பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் மிகைப் பணியில் மீளப் பணியமர்த்தப்பட்ட 39 தொழில் நுட்ப உதவியாளர்கள் / இளநிலைப் பொறியாளர்கள் விடுபட்ட பணிகாலத்தினை முறைப்படுத்தக் கோரியது – தொடர்பாக.

பார்வை: 1. அரசு கடித எண். 13078/சி1/2014-1, நாள் 10.07.2014
2. இவ்வலுவலக கடித எண்.எஸ்5(4)/65508/2001/ நாள் 31.07.2014.
3. இவ்வலுவலக கடித எண்.எஸ்2(4)/65508/2001/ நாள் 19.02.2016.

***************

பார்வை 1-ல் காணும் அரசு கடிதத்தில் பத்தி 1 முதல் பத்தி 4 வரை கேட்கப்பட்டுள்ள விவரங்களை அரசுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு தங்கள் மண்டல அளவில் தமிழ்நாடு பொறியாளர் பணித் தொகுதியைச் சார்ந்த 39 தொழில் நுட்ப உதவியாளர்கள் / இளநிலைப் பொறியாளர்கள் விடுபட்ட பணிகாலத்தினை பணிவரண்முறை செய்ய

அதன்படி பிற்சேர்க்கையில் ஏற்கனவே குறிப்பிட்டு அனுப்பிய 39 நபர்களில் தற்போது 10 நபர்களின் விவரங்கள் மட்டுமே இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது. ஆனால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மீதமுள்ள 29 நபர்களின் விவரங்கள் ஏதும் இதுநாள் வரை பெறப்படவில்லை.

எனவே, அரசிற்கு உடனடியாக அறிக்கையினை அனுப்ப வேண்டி உள்ளதால், இவ்வலுவலக கடிதத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: பிற்சேர்க்கை

சு. திருமாறன்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து (ம)
தலைமைப் பொறியாளர் (பொது), பொபது

நகல்: அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
பொதுப் பணித் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

---

*A Life Sharing, Caring; A Love of Endless Giving together*

**Mrs. M. Vijayalakshmi Guruswamy**

(AEE, PWD, Chepauk, Chennai - 600 005.)

&

**Mr. G.K. Guruswamy**

(Logistics Manager, KH Exports (I)P. Ltd. Chennai)

Mugappair, Chennai - 37.

Request the honor of your presence at the auspicious occasion of the marriage of our son

**Chi. G. Arunkumar, B.E(E&I)**

(Great Grandson of Chevoori Kotamma, Arakkonam)

(Sr. Software Engineer, CGI, Chennai)

with

**Chi. Sow. Malliswari, B. Tech (ECE).,**

(Design Engineer, RCI, Hyderabad.)

Daughter of Mr. P. Ramanaiah (TTD) & P. Anthonamma

(Sanappa Colony, Tirupathi - 517 501)

on Thursday, June 16, 2016

from 9-00 a.m to 10.00 a.m

**at Sri Ammanaa Mahaall A/c Kalyana Mandapam**

#223/224, Cecily Pushpam Road, Golden George Nagar,

Mugappair, Chennai - 600 107

**Reception: 15.06.2016, Wednesday 7.00 p.m. onwards**

## ANNEXURE

| Sl.No. | Name and Date of Birth | Name of Circle & Division | Date of Initial Appointment | Date of Re-Trenchment | Date of Re-Appointment | Break Period to be Condoned | Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | R. CHELLATHURAI 03.06.1961 | Project Circle, Palayamkottai Poigaiyar Reservoir Project Division, Aralvaimozhi | 10.05.1982 | 10.05.1987 | 07.07.1995 | 11.05.1987 to 06.07.1995 | |
| 2 | M.SIVARAM 13.09.1959 | Tank Modernisation Circle, Vellore, Tank Modernisation Division, Kancheepuram | 10.03.1983 | 31.08.1987 | 07.07.1995 | 11.05.1987 to 06.07.1995 | |
| 3 | V.R. RAGHAVENDRAN 20.05.1962 | Tank Modernisation Circle, Vellore, Tank Modernisation Division, Kancheepuram | 21.06.1983 | 31.10.1983 | 14.09.1984 | 01.11.1983 to 13.09.1984 | |
| 4 | P. KARUNANITHI 15.10.1982 | Tank Modernisation Circle, Vellore, Tank Modernisation Division, Tindivanam | 23.05.1983 | 30.06.1988 | 12.07.1989 | 01.07.1988 to 11.07.1989 | |
| 5 | N.S. GOWRISANKAR 20.02.1962 | Tank Modernisation Circle, Vellore.Tank Modernisation Division, Tindivanam | 23.05.1983 | 30.06.1988 | 12.07.1989 | 01.07.1988 to 11.07.1989 | |
| 6 | B. RAVICHANDRAN 11.05.1956 | Ground Water Circle, Chennai.Ground Water Division, Chennai | 23.05.1983 | 30.06.1988 | 12.07.1989 | 01.07.1988 to 11.07.1989 | |
| 7 | T. VENKATESAN 10.06.1961 | Tank Modernisation Circle, Vellore. | 12.11.1984 | 30.06.1988 | 27.07.1995 | 01.07.1988 to 26.07.1995 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | N. KARTHIKEYAN<br>02.02.1961 | Upper Cauvery Basin Circle, Salem | 17.09.1984 | 25.09.1989 | 11.10.1995 | 26.09.1989 to 10.10.1995 | |
| 9 | M. RAMASAMY<br>20.05.1961 | New Veeranam Project Circle, Chidambaram.<br>New Veeranam Project Division-1. Kattumanarkoil | 14.07.1983 | 19.08.1987 | 05.07.1995 | 20.08.1987 to 04.07.1995 | |
| 10 | M. MANIMARAN<br>20.04.1965 | Vaippar Basin Circle, Virudhunagar,<br>Erukkankudi Reservoir Project Division, Erukkankudi. | 9.11.1984 | 30.06.1985 | 12.05.1986 | 01.07.1985 to 11.05.1986 | |
| 11 | M. SENRAM<br>30.05.1962 | P. Palar Basin Circle, Chennai Kosasthalaiyar Basin Division, Tiruvallur | 09.03.1983 | 03.09.1987 | 18.09.1998 | 04.07.1987 to 17.09.1998 | |
| 12 | S. BALASUBRAMANIAN<br>18.12.1952 | New Veeranam Project Circle, Chidambaram.<br>New Veeranam Project Division-1, Kattumanarkoil | 05.12.1980 | 07.10.1988 | 07.10.1988 | 01.07.1988 to 06.10.1988 | |
| 13 | G. GOBI<br>24.04.1958 | Buildings (C&M) Circle, Erode, Buildings Construction Division, Coimbatore | 21.03.1983 | 04.09.1987 | 27.10.1988 | 05.09.1987 to 26.10.1998 | |
| 14 | S.R. SUBRAMANIAN<br>29.05.1961 | Plan Formulation Circle, Salem-7. Project P&D Division,Salem-7 | 21.03.1983 | 11.06.1987 | 14.07.1995 | 11.06.1987 to 13.07.1995 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | P. SHANMUGAM 12.07.1958 | Buildings (C&M) Circle, Trichy. Buildings (C&M) Division, Karur | 07.07.1983 | 24.08.1987 | 11.07.1985 | 25.08.1987 to 10.07.1995 | |
| 16 | S. NAGARAJAN 13.05.1962 | Buildings (C&M) Circle, Trichy | 19.09.1986 | 31.07.1988 | 11.08.1995 | 01.08.1988 to 10.08.1995 | |
| 17 | G.S. AYYAPPAN 23.04.1962 | Buildings (C&M) Circle, Trichy. | 20.06.1983 | 08.09.1987 | 05.03.2001 | 08.09.1987 to 04.03.2001 | |
| 18 | A. SHANTHI 01.03.1963 | Buildings (C&M) Circle, Trichy. | 05.01.1983 | 31.08.1987 | 18.09.1995 | 01.09.1987 to 17.09.1995 | |
| 19 | S. GANESAMURTHY 13.05.1959 | Buildings (C&M) Circle, Thanjavur | 19.03.1984 | 31.08.1987 | 01.12.1995 | 01.09.1987 to 30.11.1995 | |
| 20 | A. PALANIVELU 20.09.1952 | Vaippar Basin Circle, Virudhunagar | 06.08.1978 | 31.08.1987 | 11.01.1995 | 01.09.1987 to 10.01.1995 | |
| 21 | S. SUBRAMANIAN 30.05.1961 | Vaippar Basin Circle, Virudhunagar | 04.08.1981 | 02.09.1987 | 11.10.1995 | 03.09.1987 to 10.10.1995 | |
| 22 | A. RAJASEKARAN 30.05.1961 | Vaippar Basin Circle, Virudhunagar | 24.03.1983 | 31.08.1987 | 25.08.1999 | 01.09.1987 to 24.08.1999 | |
| 23 | E. JAYABALAN 20.05.1958 | Lower Vaigai Basin Circle, Sivagangai. | 21.03.1983 | 26.08.1987 | 25.08.1995 | 27.08.1987 to 24.08.1995 | |
| 24 | D.MAGESHKUMARDAVID 17.08.1952 | Lower Vaigai Basin Circle, Sivagangai. | 23.09.1983 | 20.08.1987 | 05.07.1995 | 21.08.1987 to 04.07.1995 | |
| 25 | S. ILAMURUGU 08.04.1963 | Buildings (C&M) Circle, Tirunelveli. Division,Salem-7 | 23.04.1983 | 10.05.1987 | 14.07.1995 | 11.05.1987 to 13.07.1995 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 26 | A. MAHARAJAH<br>11.05.1955 | Buildings (C&M) Circle, Tirunelveli. | 04.04.1983 | 25.05.1987 | 31.07.1987 | 26.05.1987 to 30.07.1987 | |
| 27 | S. RADHAKRISHNAN<br>02.06.1957 | Buildings (C&M) Circle, Thanjavur.Buildings (C&M) Division, Thanjavur | 02.06.1980 | 15.09.1987 | 06.04.1999 | 16.09.1987 to 05.04.1999 | |
| 28 | S. ASHOKAN<br>30.06.1960 | Tank Modernisation Circle, Vellore.Tank Modernisation Division, Chennai | 29.07.1986 | 30.06.1988 | 05.04.1989 | 01.07.1988 to 04.04.1989 | |
| 29 | K. MOHAN<br>01.02.1955 | Buildings (C&M) Circle, Salem.Executive Engineer, PWD., Buildings (C&M) Division, Dharmapuri | 06.12.1982 | 31.08.1987 | 07.07.1995 | 01.09.1987 to 06.07.1995 | |

S. Thirumaran
Engineer-in-Chief, WRD &
Chief Engineer (General), PWD.

/forwarded by Order/ Superintendent

பெறுநர்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை -5

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - இளநிலைப்பொறியாளர்/ உதவிப் பொறியாளர் முதுநிலைப் பட்டியல் (Seniority list draft) சுற்றுக்கு விடப்பட்டது சம்மந்தமாக.

பார்வை:
1. முதன்மைத்தலைமைப்பொறியாளர். (நீ.ஆ.து) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) கடித எண் எஸ் 2 (2)/ 59620/ 2015 நாள் 19.02.2016.
2. அரசு ஆணை எண்: 1 பொ.ப.து நாள் 02.01.1990
3. மாநில நிர்வாக தீர்ப்பாயம் வழக்குகள் OA எண்கள் 3364, 3367, 3462/ 1994.
4. மாநில நிர்வாக தீர்ப்பாயம் OA 3348/ 1994 தீர்ப்பு நாள் 17.04.1997.
5. நிலுவை விதித்திருத்தம் அரசு கடித எண் 26642/ பி2/2003- 10 நாள் 24.02.2006.
6. அரசு கடித எண் 21742/ B2 / 2013-2 நாள்: 11.12.2013.
7. அரசு கடித எண் 20241/ B2 / 2006-6 நாள்: 15.06.2007.
8. அரசாணை (நிலை) எண் 155 பொதுப்பணி(பி2)த் துறை நாள்:13.08.2015
9. முதன்மைத்தலைமைப்பொறியாளர் செயல் முறை ஆணை எண் எஸ் 2 (2) / 29148/ 2004 நாள் 06.11.2015.
10. உயர்நீதிமன்ற வழக்கு எண்: WP No: 7523/1997 தீர்ப்பு நாள்: 06.11.2006.
11. உயர்நீதிமன்ற வழக்கு எண்:WP No: 21344/1997 தீர்ப்பு நாள்: 26.07.2007.
12. உச்சநீதி மன்ற வழக்கு எண் SLP No: 2495/2007.

பார்வை (1)-ல் கண்டுள்ள கடிதத்தில் இளநிலைப்பொறியாளர் / உதவி பொறியாளர்களின் முதுநிலைப் பட்டியல் டிராப்ட் சுற்றுக்கு விடப்பட்டுள்ளது. மேலும் இதில் கட்டிடத்துறை, அல்லது நீர்வள ஆதாரத்துறை எதில் பணி புதிய விருப்பம் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

பார்வை (2)-ல் கண்டுள்ள அரசாணையின் படி பகுதி நேர பட்டம் பயின்று, 5 ஆண்டுகள் பணி முடித்த வரைவாளர்கள், ஓவர்சீயர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் உதவிப்பொறியாளர் பதவி உயர்வு பெற தகுதி பெறுகிறார்கள். பார்வை (2)-ல் கண்டுள்ள அரசாணையை அமுல்படுத்தாததால் பார்வை(3) மற்றும் பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டன.

அதனடிப்படையில் 10.12.1996 அன்று அப்போதைய பொதுப்பணித்துறை செயலாளர் அவர்கள் பொறியாளர் சங்கம், உதவிப்பொறியாளர் சங்கம், தமிழ்நாடு பொறியியல் சங்கம் மற்றும் வரைவாளர் சங்கம் ஆகிய சங்கங்களின் பொறுப்பாளர்களை வைத்து ஒரு கூட்டம் (Meeting) நடத்தி "உதவிப்பொறியாளர்களுக்குரிய 75% விகிதாச்சாரத்தில் 3:1 என்று பிரித்து அதில் 75 சதவிகிதத்தை நேரடி நியமனம் மூலமும் 25 சதவிகிதம் ஊட்டுப் பதவி மூலமும் உதவிப்பொறியாளர்களை நிரப்ப வேண்டும்" என தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒப்பந்தம் போடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் மேற்கண்ட அனைத்துச் சங்க பிரதிநிதிகளும் கையொப்பம் இட்டுள்ளனர் .

பார்வை (4)-ல் கண்டுள்ள தீர்ப்பில் மூன்று உதவிப்பொறியாளர் பதவிகள் நேரடி நியமனம் மூலமும் ஒரு உதவிப்பொறியாளர் பதவி ஊட்டுப் பதவியிலிருந்தும் நிரப்ப வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் தகுதியுள்ள வரைவாளர், ஓவர்சீயர்களுக்கு உதவிப்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது. ஆனால் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு மட்டும் உதவிப்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்படவில்லை.

பார்வை (5)-ல் கண்டுள்ளபடி அரசுநிலுவை விதித்திருத்தம் (Pending Rule Amendment) வழங்கிய பிறகு 24.02.2006 மற்றும் அதற்கு பின்னர் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

பார்வை (6)-ல் கண்டுள்ள படி அரசால் வழங்கப்பட்ட ஆணையின்படி தொழில்நுட்பஉதவியாளர் பதவியிலிருந்து உதவிப்பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்கள் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளார்கள்.

பார்வை (2)-ல் கண்டுள்ள அரசாணையின்படி உதவிப்பொறியாளர் பதவி உயர்வு பெற தகுதி இருந்தும் வேண்டுமென்றே தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு இளநிலைப்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

பார்வை (5)-ல் கண்டுள்ள நிலுவை விதித்திருத்தம் (Pending Rule Amendment) மற்றும் பார்வை (7)-ல் கண்டுள்ள அரசு கடிதம் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கண்ட 72 நபர்களுக்கு 24.02.2006 முதல் உதவிப்பொறியாளர் பதவி வழங்கப்பட்டது. இதன்மூலம் மேற்கண்ட 72 நபர்களுக்கு தலைமைப்பொறியாளரால் இழைக்கப்பட்ட அநீதி களையப்பட்டது.

பார்வை (8)-ல் கண்டுள்ள அரசாணை மேற்கண்ட 72 உதவிப்பொறியாளர்களை பணிவரன்முறை செய்ய மேதகு ஆளுநரின் ஆணைப்படி பிறப்பிக்கப்பட்டது.

பார்வை (8)-ல் கண்டுள்ள அரசாணை பார்வை (9)-ல் கண்டுள்ள முதன்மைத்தலைமைப்பொறியாளர் (நீ.ஆ.து) மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) அவர்களின் செயல்முறை ஆணை மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பார்வை (2)ல் கண்டுள்ள அரசாணைக்கு எதிராக பொறியாளர் சங்கம் மாநில நிர்வாக தீர்ப்பாயம் மற்றும் உயர்நீதி மன்றத்தில் தொடுத்த அனைத்து வழக்குகளிலும் (பார்வை 3,4,9,10 மற்றும் பல்வேறு வழக்குகள்) பார்வை (2)-ல் கண்டுள்ள அரசு ஆணைக்கு ஆதரவாக தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதை எதிர்த்து பொறியாளர் சங்கம் பார்வை (12)-ல் கண்டுள்ளபடி உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது. அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

எனவே ஊட்டுப்பதவியிலிருந்து உதவிப்பொறியாளர் பதவி பெற்றவர்களை இளநிலைபொறியாளர்களுக்கு உரிய 25% விகிதாச்சாரத்தில் வைத்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்குவது விதிகளுக்கும், நீதிமன்ற தீர்ப்புகளுக்கும் எதிரானது.

எனவே ஊட்டுப் பதவியிலிருந்து உதவிப்பொறியாளர் பதவி பெற்றவர்களை உதவிப்பொறியாளர் முதுநிலையில் வைத்து உதவிப்பொறியாளர்களுகுரிய 75% விகிதாச்சாரத்தில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் (TNPSC) உதவிப் பொறியாளர்களை தேர்வு செய்யும் போதுதான் முதன்முதலாக கட்டிடப் பிரிவு (Building Organization) நீர்வள ஆதாரத்துறை (WRD) என்று தனித்தனியாக தேர்வு செய்யப்பட்டார்கள். எனவே 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஊட்டுப் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்களை, கட்டிடப் பிரிவு, நீர்வள ஆதாரத்துறை என தனித்தனியாக பிரிக்காமல் ஏற்கனவே நடை முறையில் உள்ளது போல் பொதுவான முதுநிலையில் வைத்து உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

இதைப் போலவே 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரை உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வுக்கு 75% விழுக்காடு உதவிப் பொறியாளர் மற்றும் 25% இளநிலைப் பொறியாளர்களுக்கும் கட்டிடப் பிரிவு நீர்வள ஆதாரத்துறை என்று பிரிக்காமல் இளநிலைப் பொறியாளர்களையும் பொதுவான முதுநிலையில் வைத்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கும் போது 25% விழுக்காட்டிற்கு உரிய இளநிலைப் பொறியாளர்களையும் கட்டிடப்பிரிவு, நீர்வள ஆதாரத்துறை என தனித்தனியாக பிரித்துக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

2006 ஆம் ஆண்டு ஊட்டுப் பதவியிலிருந்து இளம் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற திரு.ஞான சேகரன் உள்ளிட்ட 8 நபர்கள் 1997 ஆம் ஆண்டு இளம் பொறியாளர் முதுநிலைப்பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது தவறானதாகும். எனவே மேற்கண்ட 8 பேரை 2006 ஆம் ஆண்டு இளம் பொறியாளர் முது நிலையில் வைக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

(து.முருகேசன்)
பொது செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை -5

நகல்:

கூடுதல் தலைமைச்செயலாளர்,
பொதுப்பணித்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை -9

பெறுநர்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை -5

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - இளநிலைப்பொறியாளர்/ உதவிப் பொறியாளர் முதுநிலைப்பட்டியல் (Seniority list draft) சுற்றுக்கு விடப்பட்டது சம்மந்தமாக.

பார்வை: 1. முதன்மைத்தலைமைப்பொறியாளர். (நீ.ஆ.து) மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) செ.மு.எண் எஸ் 2 (2)/59620/ 2015 நாள்:19.02.2016.

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் இளநிலைப்பொறியாளர்/ உதவிப்பொறியாளர்களின் முதுநிலைப்பட்டியல் டிராப்ட் சுற்றுக்கு விடப்பட்டுள்ளது. மேலும் இதில் கட்டிடத்துறை, அல்லது நீர்வள ஆதாரத்துறை எதில் பணி புதிய விருப்பம் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் ஊட்டுப் பதவியிலிருந்து உதவிப்பொறியாளர் பதவி பெற்றவர்களை உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு 25% விழுக்காட்டில் வைக்க உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது நடைமுறையில் உள்ள விதிகளுக்கும், நீதிமன்ற தீர்ப்புகளுக்கும் முரணானது. எனவே ஊட்டுப் பதவியிலிருந்து உதவிப்பொறியாளர் பதவி பெற்றவர்களை உதவிப் பொறியாளர் முதுநிலைப்பட்டியலில் வைத்து 75% விழுக்காட்டில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் (TNPSC) உதவிப் பொறியாளர்களை தேர்வு செய்யும் போதுதான் முதன்முதலாக கட்டிடப் பிரிவு (Building Organization) நீர்வள ஆதாரத்துறை (WRD) என்று தனித்தனியாக தேர்வு செய்யப்பட்டார்கள். எனவே 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஊட்டுப் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற உதவிப் பொறியாளர்களை, கட்டிடப் பிரிவு, நீர்வள ஆதாரத்துறை என தனித்தனியாக பிரிக்காமல் ஏற்கனவே நடை முறையில் உள்ளது போல் பொதுவான முதுநிலையில் வைத்து உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

இதைப் போலவே 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரை உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வுக்கு 75% விழுக்காடு உதவிப் பொறியாளர் மற்றும் 25% இளநிலைப் பொறியாளர்களுக்கும் கட்டிடப் பிரிவு நீர்வள ஆதாரத்துறை என்று பிரிக்காமல் இளநிலைப் பொறியாளர்களையும் பொதுவான முதுநிலையில் வைத்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கும் போது 25% விழுக்காட்டிற்கு உரிய இளநிலைப் பொறியாளர்களையும் கட்டிடப்பிரிவு, நீர்வள ஆதாரத்துறை என தனித்தனியாக பிரித்துக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

2006 ஆம் ஆண்டு ஊட்டுப் பதவியிலிருந்து இளம் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற திரு.ஞான சேகரன் உள்ளிட்ட 8 நபர்கள் 1997 ஆம் ஆண்டு இளம் பொறியாளர் முதுநிலைப்பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது தவறானதாகும். எனவே மேற்கண்ட 8 பேரை 2006 ஆம் ஆண்டு இளம் பொறியாளர் முது நிலையில் வைக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

(த.முருகேசன்)
பொது செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை -5

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்:216 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 30.04.2016)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | S. சம்பத் | முதன்மைதலைமைப்பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப்பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம் |
| 2. | S. அசோகன் | தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் |
| 3. | S. மீனாட்சிசுந்தரம் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 4. | N. இளங்கோ | மின் பொறியாளர் |
| 5. | A. மாரிச்சாமி | உதவி செயற்பொறியாளர் |
| 6. | K. கருணாகரன் | உதவி செயற்பொறியாளர் |
| 7. | S. சண்முகவடிவு | உதவி செயற்பொறியாளர் |
| 8. | K.M. ஜெனார்த்தனன் | உதவி செயற்பொறியாளர் |
| 9. | T. அழகேசன் | உதவி செயற்பொறியாளர் (மின்) |

(ஆளுநரின் ஆணைப்படி)

**நா.ச.பழனியப்பன்**
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5.**

வழங்கும்

# பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டம் - 2016

**10 அல்லது 12 தேறியவர்களுக்கு மட்டும்**

**விண்ணப்பப்படிவம் (தெளிவாக எழுதவும்)**

1. மாணவர் / மாணவியர் பெயர் ..............................................................
2. தந்தை / பாதுகாவலரின் பெயர் ..............................................................
3. உறுப்பினர் எண் ..............................................................
4. முகவரி ..............................................................
5. மாணவர் / மாணவி உறுப்பினருக்கு உறவுமுறை ..............................................................
6. 10 அல்லது 12-ம் வகுப்பு தேர்வில் மொத்த மதிப்பெண்கள் (நகல் இணைக்கப்பட வேண்டும்) ............................
7. 10 அல்லது 12-ம் வகுப்பில் சேர்ந்த ஆண்டு மாதமும் .....................
8. 10 அல்லது 12-ம் வகுப்பில் தேர்வில் வெற்றி பெற்ற மாதம் ஆண்டு முதல் முயற்சியிலேயே தேர்வு பெற்றவரா? ஆம் / இல்லை ...................

**சங்க உறுப்பினர் கையொப்பம்** **மாணவ / மாணவி கையொப்பம்**

## சான்றிதழ்

பொறியாளர் ................................ கிளைச் சங்கத்தின் ஆயுள் கால உறுப்பினர் எண் ................ / சாதாரண உறுப்பினர் எண் .................................. தொடர்ந்து 2014, 2015 மற்றும் 2016ம் ஆண்டில் உறுப்பினர் கட்டணம் / சிறப்பு நன்கொடை செலுத்தி உறுப்பினராக இருந்துள்ளார். மேற்படி உறுப்பினரின் மகன் / மகள் / சகோதரர் / சகோதரி 2016-ம் வருடம் மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது 12 வகுப்பு தேர்வில் முதல் முறையிலேயே ......................... மதிப்பெண்களை பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார் என சான்றளிக்கிறோம்.

| உறுப்பினர் தொகை | இரசீது எண் | தேதி |
|---|---|---|
| 2014............................ | .......................... | .................. |
| 2015............................ | .......................... | .................. |
| 2016............................ | .......................... | .................. |

(உரிய விபரங்களை சரி பார்த்துக் கிளைச் செயலாளர் சான்றிதழ் அளித்தல் வேண்டும்)

செயலாளர்.......................................................கிளை

## தலைமைச் சங்கம்

மாணவர் / மாணவியின் பெயர் ..............................................................

சங்க உறுப்பினர் பெயர் ..............................................................

உறவு முறை ..............................................................

2016ம் வருட மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது 12 வகுப்புத் தேர்வில் மதிப்பெண்கள் பெற்று ..........................................................பரிசாக ரூ...........................பெறுகிறார்.

**பொதுச் செயலாளர்** **தலைவர்**

# தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5.

## பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டம் - 2016

(10-ம் வகுப்புக்கும், 12-ம் வகுப்புக்கும் தனித் தனியாக)

**10-ம் வகுப்பு**

- முதல் பரிசு ரூ. 3000/- வீதம்
- இரண்டாம் பரிசு ரூ. 2000/- வீதம்
- மூன்றாம் பரிசு ரூ. 1000/- வீதம்

**12-ம் வகுப்பு**

- முதல் பரிசு ரூ.5000/- வீதம்
- இரண்டாம் பரிசு ரூ. 3000/- வீதம்
- மூன்றாம் பரிசு ரூ. 2000/- வீதம்

**திட்டம்:**

நமது சங்கத்தின் முன்னாள் மூத்த தலைவர்கள் பொறியாளர் எஸ்.கணபதி மற்றும் பொறியாளர் எஸ்.முருகானந்தம் ஆகியோர் சங்கத்திற்கு ஆற்றிய அருந்தொண்டினைப் பாராட்டி பெருமைப்படுத்தும் வகையில் 1976 மற்றும் 1980-ம் ஆண்டு முதல் இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இச்சங்க உறுப்பினர்களின் குழந்தைகள் மற்றும் அவரை சார்ந்த சகோதர / சகோதரிகளின் கல்வி நலனுக்காகவும் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

2016-ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற 10-ம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சங்க உறுப்பினர்களை சார்ந்த கல்வி கற்கும் ஒருவருக்கு முதல் பரிசு ரூ. 3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசு ரூ. 2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ. 1000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) வீதம் இந்த கல்விப் பரிசு திட்டங்களும் வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் நிர்ணயிக்கப்படுவர்

2016-ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற 12-ம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சங்க உறுப்பினர்களை சார்ந்த கல்வி கற்கும் ஒருவருக்கு முதல் பரிசு ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசு ரூ. 3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ. 2000/- (ரூபாய் ஒரு இரண்டாயிரம் மட்டும்) வீதம் இந்த கல்விப் பரிசு திட்டங்களும்

வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் நிர்ணயிக்கப்படுவர்

## தகுதி, கலந்து கொள்ளும் முறை மற்றும் விதிகள்:

1. 10-ம் வகுப்பு அல்லது 12-ம் வகுப்புகளில் முதல் தடவையிலேயே தேர்வு பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

2. தகுதியுடையோர் விண்ணப்பத்தினை, அதற்கென முன் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து மூடி முத்திரையிட்டு கவரின் மேல் கல்விப் பரிசுத் திட்டம் பெயரைக் குறிப்பிட்டு தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5 என்ற முகவரியிட்டு ரூ. 50 கிளையில் செலுத்தி உரிய ரசீதினை இணைத்து அனுப்ப வேண்டும்.

3. மதிப்பெண் பட்டியல் நகல் ஒன்று கிளைச் சங்க செயலரால் மூல மதிப்பெண் பட்டியலுடன் ஒப்பிடப்பட்டு, சான்றிடப்பட்டு இணைத்து அனுப்ப வேண்டும்.

4. மேற்கூரிய வண்ணம் முழுமையாக நிரப்பப் பெற்ற படிவம் 31.07.2016-க்குள் மூடி முத்திரையிட்ட (Sealed) உறையில் சென்னையிலுள்ள தலைமைச் சங்கத்திற்கு நேரடியாக வந்து சேர வேண்டும். 31.07.2016 க்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

5. விண்ணப்பதாரரின் பெற்றோர் / பாதுகாவலர் இச்சங்கத்தில் தொடர்ந்து 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் உறுப்பினராக சந்தா செலுத்திய இரசீதுகளின் எண்கள் பற்றிய விவரத்தினை கிளைச் செயலாளர் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். ஆயுள் உறுப்பினராக இருப்பின் செலுத்திய சிறப்பு நன்கொடை அதற்கான விவரங்களும் தெரிவிக்கப்பட வேண்டும். மேற்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புகின்ற முழு பொறுப்பு உறுப்பினர்களையே சாரும். குறிப்புகள் முழுமையாக விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அந்த விண்ணப்பம் தொடர்பாக கிளைச் சங்க பொறுப்பாளர்களையோ அல்லது அந்த உறுப்பினர்களிடமிருந்தோ எந்த விளக்கமும் பெறாமலேயே நேரிடையாக நிராகரிக்கப்படும் என்பதையும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

6. விண்ணப்பத்துடன் மாணவ / மாணவியரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இணைத்து அனுப்புதல் வரவேற்கத் தகுந்தது மட்டுமல்ல, மிக அவசியமானது கூட, பரிசு பெறுவோரின் புகைப்படங்கள் பின்னர் கதிரில் வெளியிடப்படும்.

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்:257 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 31.05.2016)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | E. தமிழரசன் | தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம் |
| 2. | P.L. வள்ளியப்பன் | தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம் |
| 3. | R. சுந்தர் | கொதிகலன்கள் இயக்குநர் |
| 4. | N. ராஜ்குமார் | கண்காணிப்புப் பொறியாளர் (மின்) |
| 5. | M. பழனிசாமி | செயற்பொறியாளர் |
| 6. | R. காமராஜ் | செயற்பொறியாளர் |
| 7. | M. கலையரசு | செயற்பொறியாளர் |
| 8. | M. கலைச்செல்வன் | செயற்பொறியாளர் |
| 9. | P. கந்தசாமி | செயற்பொறியாளர் |
| 10. | V. ராஜமோகன் | செயற்பொறியாளர் |
| 11. | P.L. கருப்பையா | இணை இயக்குநர் |
| 12. | P. மதிவாணன் | துணை இயக்குநர் |
| 13. | V.A. வெள்ளைச்சாமி | உதவி இயக்குநர் (நிலவேதியியல்) |
| 14. | S. பொன்னுசுவாமி | உதவி செயற்பொறியாளர் |
| 15. | S. பிரபாகரன் | உதவி செயற்பொறியாளர் |
| 16. | V. குருசாமி | உதவி செயற்பொறியாளர் |
| 17. | V. பாலமுருகன் | உதவி செயற்பொறியாளர் |
| 18. | RM.A. பொன்னன் | உதவி செயற்பொறியாளர் |
| 19. | A. வெள்ளைமணி | உதவி செயற்பொறியாளர் |
| 20. | R. நாராயணசாமி | உதவி செயற்பொறியாளர் |
| 21. | M. ஆறுமுகநயினார் | உதவி செயற்பொறியாளர் |
| 22. | S. மோகன் | உதவி செயற்பொறியாளர் |
| 23. | G. விஜயகுமாரன் | உதவி செயற்பொறியாளர் |
| 24. | R. ஞானகுரு | உதவி செயற்பொறியாளர் |
| 25. | T.R. இராஜன் | உதவி செயற்பொறியாளர் |
| 26. | T. உதயகுமார் | உதவி செயற்பொறியாளர் |
| 27. | R. பால்ராஜ் | உதவி செயற்பொறியாளர் |
| 28. | R. இரவிச்சந்திரன் | உதவி செயற்பொறியாளர் |
| 29. | K. கலியமூர்த்தி | உதவி செயற்பொறியாளர் |
| 30. | B. சுகுமாரன் | உதவி செயற்பொறியாளர் |
| 31. | T. இளங்கோ | உதவி செயற்பொறியாளர் (மின்) |

| | | |
|---|---|---|
| 32. | V. வேலுச்சாமி | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 33. | P. சுப்ரமணியன | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 34. | D. மூர்த்தி | தலைமை வரைதொழில் அலுவலர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**நா.ச.பழனியப்பன்**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2016 /நாள் 31.05.2016ன் படி 31.05.2016 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவிப் பெயர் |
|---|---|---|---|
| 1. | P. ஹேமாவதி | 14.05.1958 | ஆட்சி அலுவலர் |
| 2. | E. சாந்தி | 09.05.1958 | ஆட்சி அலுவலர் |
| 3. | A. இராஜேந்திரன் | 18.05.1958 | ஆட்சி அலுவலர் |
| 4. | D. அருளமணி ஜாய்ஸ் | 20.05.1958 | ஆட்சி அலுவலர் |
| 5. | E. ஜெயபாலன் | 20.05.1958 | இளம் பொறியாளர் |
| 6. | S. தினகரவேல் | 01.06.1958 | இளம் பொறியாளர் |

**சு. திருமாறன்**

**முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது.,**

**(ம) தலைமைப் பொறியாளர் (பொது)**

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருவாரூர் - நாகை கிளை உறுப்பினர் பொறியாளர் D. மனோகரன், உ.செ.பொ அவர்கள் 26.05.2016 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் கிழக்கு மண்டல செயலாளர் பொறியாளர் ஆர். தயாளகுமார் உ.செ.பொ அவர்களின் மாமனார் வி. பாலசுப்ரமணியன் அவர்கள் 24.05.2016 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மாநில துணைத் தலைவர் பொறியாளர் எஸ்.ஆர். சுப்ரமணியம் இ.பொ அவர்களின் சிறிய மாமனார் கே. சந்திரசேகரன் (வயது 73) அவர்கள் 27.05.2016 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2016 /நாள் 29.04.2016ன் படி 30.04.2016 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பதவிப் பெயர் |
|---|---|---|
| 1. | G. கோபி | இளம் பொறியாளர் |

**சு. திருமாறன்**
**முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது.,**
**(ம) தலைமைப் பொறியாளர் (பொது)**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திண்டுக்கல் கிளை உறுப்பினர் பொறியாளர் கே. கண்ணன் இளம் பொறியாளர் அவர்கள் பதவி உயர்வு பெற்றமைக்கு மையச்சங்கத்திற்கு 1000/- (ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருவாரூர் - நாகை கிளை உறுப்பினர் பொறியாளர் எம். கணேசன் இளம் பொறியாளர் (ஓய்வு)அவர்கள் பணி ஓய்வு பெற்றமைக்கு மையச்சங்கத்திற்கு 1000/- (ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் வி.குருசாமி உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் பணி ஓய்வு பெற்றமைக்கு மையச்சங்கத்திற்கு 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் பொங்கும் நிதி செயலாளர் பொறியாளர் நா. பாஸ்கர் இளம் பொறியாளர் அவர்கள் மகள் திருமணத்தை முன்னிட்டு மையச்சங்கத்திற்கு ரூ. 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் எம்.சிவராமன் இளம் பொறியாளர் அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக மையச்சங்கத்திற்கு 1000/- (ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் வணக்கம்!

நிகழும் மங்களகரமான துர்முகி ஆண்டு வைகாசி மாதம் 24- ஆம் நாள் (06.06.2016) திங்கட்கிழமை துவிதியை திதி, மிருகசீரிஷ நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.00 மணிக்கு மேல் 7.30 மணிக்குள் மிதுன லக்னத்தில்

சீர்காழி வட்டம், வடரெங்கம்,
நாராயணசாமி - பூபதி இவர்களின் பேத்தியும்
நா. பாஸ்கர் - சுந்தரி இவர்களின் குமாரத்தியுமாகிய
திருவளர் செல்வி

**Dr. பா. சுபாஷினி M.B.B.S.,**

(அரசு மருத்துவ அலுவலர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், குமராட்சி)

என்கிற கன்னிகையை

காட்டு மன்னார் கோயில் வட்டம், குணமங்கலம்
தெய்வத்திருவாளர்கள் நடராஜன் - செல்லப்பாங்கி இவர்களின் பேரனும்
ந. சந்திரன் - கலாமேரி இவர்களின் மகனுமாகிய
திருவளர் செல்வன்

**Dr. ச. வினோத்ராஜ், M.B.B.S.,**

(அரசு மருத்துவ அலுவலர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், வல்லம்படுகை)
என்கிற வரனுக்கு

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்த வண்ணம் மேற்படி திருமணம் ஸ்ரீமுஷ்ணம், வெள்ளாழத் தெரு, **கிரீன்பார்க் திருமணமண்டபத்தில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்திட அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் அன்புள்ள**
**நா. பாஸ்கர்,**
**இளம் பொறியாளர், பொ.ப.து, சிதம்பரம்,**
**முன்னாள் பொங்கும் நிதி செயலாளர்,**
**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**திருமதி பா. சுந்தரி**
**பா. சுஜித்குமார் .B.E.,**
**பா. சுஜினி .B.E.,**
**செல்: 94431 30262**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் வி.குருசாமி உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு பொதுச் செயலாளர் சால்வை அணிவித்தல்



தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் துணைத்தலைவர் பொறியாளர் சி. கணபதி அவர்களுக்கு வழங்கப்பட்ட பாராட்டு சான்றிதழ்



நாகப்பட்டினம் மாவட்டம்

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2016

பாராட்டு சான்றிதழ்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற 2016 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக திரு / திருமதி / செல்வி சி. கணபதி, [illegible] உதவிப் பொறியாளர், [illegible] சீர்காழி என்பவருக்கு இவரது பணித்திறனை பாராட்டி பாராட்டு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இடம் : நாகப்பட்டினம்.
நாள் : 24.05.2016

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவர்
நாகப்பட்டினம்.

Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/2015-17Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**JUNE 2016**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கோவை - பொள்ளாச்சிக் கிளைத் தலைவர் பொறியாளர் எஸ். பொன்னுசுவாமி உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு மாநில செயற்குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் வாழ்த்து தெரிவிக்கிறார்.



தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Published on 03-06-2016**
**Postng on 06-06-2016**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY:Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er. K. KAMALDEEN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. J. VINOTH, AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. PH: 9444075312